செ.வெ.எண்.45 நாள்.21.12.2011

**நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளை தமிழ்நாடு சட்டப்பேரவை அரசு உறுதிமொழிக்குழு தலைவர் திரு.என்.டி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் சட்டமன்ற உறுப்பனர்கள் கொண்ட குழுவினர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

இராசிபுரம் புறவழிச் சாலை பகுதி 1 – 6 கி.மீ நீளத்திற்கு அமைக்கப்படவுள்ளது. இதற்காக ரூ.18 கோடி நிதி அரசின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்காக நில ஆர்ஜித பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. புறவழிச்சாலை அமையவுள்ள இடங்களை பார்வையிட்ட அரசு உறுதிமொழி குழு நில ஆர்ஜித பணிகளை விரைவாக முடித்து புறவழிச்சாலை அமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. இராசிபுரம் அருள்மிகு பொன்வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் பிரபாகரன் என்ற உபயதாரர் மூலம் இராஜகோபுரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை பார்வையிட்ட குழு பணியினை விரைந்து முடிக்க அறிவுறுத்திப்பட்டது.

ராசிபுரம் ஒருங்கிணைந்த நீதிமன்ற கட்டிடம் ரூ.4.02 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணியினை பார்வையிட்ட உறுதிமொழிகுழு பணியினை ஒப்பந்த காலத்திற்குள் விரைந்து முடித்திட அறிவுரை வழங்கப்பட்டது. வையப்பமலை அரசினா் மாணவா் விடுதி (ஆதிதிராவிடர்)யை பார்வையிட்ட உறுதிமொழிகுழு மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு சோப்பு, எண்ணெய் ஆகிய விவரங்களை கேட்டறிந்தனர். மாணவர்கள் உபயோகத்திடும் கழிவறை மற்றும் குளியலறையை பார்வையிட்டு இந்த இடங்களை சுத்தமாக பராமரிக்க விடுதி காப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரா் திருக்கோயிலில் ரூ.2.09 கோடி மதிப்பீட்டில் 3 கொடி மரங்களுக்கு தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. இதனை குழு பார்வையிட்டது. சோழசிராமணியில் ரூ.400 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் பவானி கட்டளை தடுப்பணை நீர்மின்திட்டம் III பணிகளை குழு பார்வையிட்டது. தமிழ்நாடு மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அவர்கள் குழுவிடம் மேட்டூர் அணையிலிருந்து 20,000 கனஅடி தண்ணீர் வரும்போது இத்திட்டத்தின் மூலம் 1 மணி நேரத்திற்கு 30 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும் என கூறினா். மேலும் இத்திட்டப்பணி முழுதும் நிறைவுற்று ஜுன் 2012 முதல் மின்உற்பத்தி தொடங்கப்படும் என கூறினா். திட்டப்பணிகளை விரைந்து முடித்திட குழு அறிவுறுத்தியது.

ஆய்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.அஸ்லம்பாஷா, (ஆம்பூர்) திரு.எஸ்.பி.முத்துக்குமரன் (புதுக்கோட்டை) ப.டில்லிபாபு (அரூர்), திரு.ஏ.கே.டி.ராஜா (திருப்பரங்குன்றம்) திரு.பி.செங்குட்டுவன் (வேப்பனஹள்ளி), மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.கே.காந்திமுருகேசன், துணைத்தலைவர் திரு.ஏ.பி.பழனிவேல், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.சீத்தாலட்சுமி, நாமக்கல் சார் ஆட்சியர் திரு.டி.ஜி.வினய், திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திரு.எஸ்.கவிதா, தமிழ்நாடு மின்சாரவாரிய மேற்பார்வை பொறியாளர் திரு. அண்ணாமலை, செயற்பொறியாளர் திரு.பழனிசாமி, நெடுஞ்சாலைத்துறை கோட்டப்பொறியாளர் திரு.கே.பாலசுப்பரமணியம், பொதுப்பணித்துறை (கட்டடங்கள்) திரு.நா.ஜெகநாதன், இந்துசமய அறநிலையத்துறை உதவி ஆணையர் திருமதி.சி.ஜோதி, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரா் திருக்கோயில் உதவி ஆணையர் திரு.சீ.பாஸ்கர், மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.